# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**பி.சா.2-)**

**அசல் வழக்கு எண். 937/2017**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. சித்ரா | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | துரைசாமி | கிராமம் | |
| பணி | வழக்கறிஞர் (நீதிமன்ற ஆணையர்) | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 19.11.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையராவேன். வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் மற்றும் சர்வேயரின் இரண்டு வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அறிக்கையுடன், வாதி தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த குறிப்பாணையை தாக்கல் செய்துள்ளேன். **நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வேயர் வரைபடம் (2 எண்ணிக்கைகள்) நீ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** நீதிமன்ற உத்தரவின் படி எந்தெந்த சொத்துக்களை அளந்து நான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதியின் கிரய பத்திரம் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை பார்வையிட்டு அதன்படி அளக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் படி 15.09.2025 அன்று வழக்கு சொத்தை பார்வையிட்டு, நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்தினை முழுவதும் அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். வாதி தரப்பில் தாக்கல்

செய்யப்பட்ட குறிப்பாணையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் க.ச.எண்.194/4 மற்றும் க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளுக்கு இடையே உள்ள நிலப்பரப்பின் உயரத்தை பார்வையிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது, அதன்படி நான் பார்வையிட்டேன். அதில் க.ச.எண்.194/4 நம்பர் காலை சற்று உயரமாகவும், சுமார் ¾ முதல் 1 அடி உயரமாகவும், க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகள் உயரம் குறைவாகவும் இருந்ததை பார்வையிட்டேன், அதை எனது அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளேன்.

3. மேலும் க.ச.எண்.194/4 நம்பர் காலையில் 64 செண்ட் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி அமைத்துள்ளதை பார்வையிட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. பிரதிவாதிகளின் கிரய ஆவணம் மற்றும் வருவாய் துறை ஆவணமான புலப்படம், சிட்டா சரிபார்த்து அளந்தேன், அதில் க.ச.எண்.194/4 நம்பர் காலை ஏக்கர் 1.48 செண்ட் ஆவணப்படியும், வருவாய் ஆவணங்களின் படியும் சரியாக இருந்தது. அதில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை.மேலும் குறிப்பாணையில் க.ச.எண்.194/9 காலையில் தடம் இருப்பதாக குறிப்பிட சொல்லி இருந்தது என்றால் வாதிகளின் பூமியை ஒட்டி கிழபுறம் வண்டித்தடம் இருப்பதாகவும் அதை பார்வையிட சொல்லியும் குறிப்பிடப்பட்டிருந்தது. புல எண் குறிப்பிடவில்லை.

4. வாதிகளின் பூமியை ஒட்டி கிழபுறம் க.ச.எண்.194/9 காலை இருந்தது. அதை வாதிகள் வண்டித்தடம் என்று சொன்னார்கள், நான் பார்வையிடும்போது அதில் வண்டித்தடம் இருந்ததற்கான அடையாளம் இல்லை. முழுவதுமாக தென்னை மரங்கள் வைக்கப்பட்டு இருந்தது. ஆவணங்களின் படி க.ச.எண்.194/9 காலையானது 59 செண்ட் இருந்தது. பிரதிவாதிகளின் 2005 ஆவணத்தின் படி பு.ஏ.0.59 ஏக்கரில் பொதுவில் 4/5 பங்கு என இருந்தது. 2006 ஆவணத்தின்படி 1/5 பங்கு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. இரண்டு ஆவணங்களின் படி பிரதிவாதிகளுக்கு க.ச.எண்.194/9 காலை முழுவதும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது.

5. க.ச.எண்.194 காலை முழுவதும் அளக்கப்பட்டது. க.ச.எண்.194/5 காலையில் வடமேற்கு மூலையிலும், 194/4 நம்பர் காலையில் தென்மேற்கு மூலையிலும், இருந்த FMB ல் உள்ள I என்ற எல்லைக்கல் தான் முதலில்சரிபார்க்கப்பட்டது. அதன் பின்பு தான் மற்ற எல்லைகள் நிர்ணயம்

செய்யப்பட்டு அளவீடு செய்யப்பட்டது. க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளின் வெளிப்புறம் அளக்கப்பட்டது. மேற்படி காலைகளின் வடபுறம் புலப்படப்படி 186.6 மீ. இருக்க வேண்டும், ஆனால் 188.8 மீ. இருந்தது, 2.2 மீ வாதிகளின் சொத்திற்குள் இருந்தது. க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளின் தென்புறம் புல வரைபடத்தின் படி 168 மீ இருக்க வேண்டும், ஆனால் அளந்ததில் 172.4 மீ என இருந்தது. 4.4 மீ வாதிகளின் கம்பிவேலி போட்ட பூமிக்குள் இருந்தது. வருவாய் ஆவணங்களின் படி வாதிகளுக்கு ஏக்கர் 3.78 சென்ட் இருக்க வேண்டும் என சர்வேயர் சொன்னார். ஆனால் அளந்த பார்த்ததில் ஏக்கர் 3.84 சென்ட் இருந்தது.

6. ஆக்கிரமிப்பு பகுதி க.ச.எண்.194/8 காலையின் கிழபுறமாக இருந்தது. அதை நான் எனது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன், சர்வேயர் வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. க.ச.எண்.194/4 காலையில் தென்னை மரம் மற்றும் முருங்கை மரம் இருந்தது. கம்பிவேலி எங்கிருந்தது என்றால் பிரதிவாதி பூமி வடபுறம் சுவர் இருந்தது. மற்ற மூன்று பகுதிகளில் முழுவதுமாக கம்பிவேலி போடப்பட்டிருந்தது. க.ச.எண்.194/9 தென்புறம் கம்பிவேலி போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதற்கு தென்புறம் போக முடியாது என்றால் சரிதான். குட்டை உள்ளது.

7. கம்பிவேலி எங்கு இருந்தது என்றால் க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளின் வடபுறம் மற்றும் கிழபுறம் கம்பிவேலி இருந்தது. க.ச.எண்.194 நம்பர் காலையில் கட்டிடம் எதுவும் இல்லை. க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளின் வடபுறத்துடன் கம்பிவேலி முடிவடைகிறது. அதற்கு வடபுறம் முழுவதுமாக பிரதிவாதிகளின் பூமி கம்பிவேலியால் பாதுகாக்கப்பட்டிருந்தது. க.ச.எண்.194/8 மற்றும் 194/9 காலைகளுக்கு இடையே தென்வடலாக கம்பிவேலி இருந்தது என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. வழக்கு சொத்தை பார்வையிடுவதற்கு முன்பாக மனுதாரர் / பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பாணை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, அவர்களது ஆவணங்கள் மட்டும் கொடுக்கப்பட்டது. 07.07.2005 தேதியிட்ட கிரய பத்திரம் மற்றும் 21.02.2006 தேதியிட்ட கிரய பத்திரமும் கொடுக்கப்பட்டது. பிரதிவாதிகள் வருவாய் துறை ஆவணங்கள் கொடுக்கவில்லை. சர்வேயர் அளக்கும்போது புலப்படம், சிட்டா, ஆகிய ஆவணங்களை காட்டினார். 07.07.2005

தேதியிட்ட கிரய பத்திரத்தின்படி, கிரய ஆவணத்தை 9 நபர்கள் எழுதி கொடுத்தனர் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில், கிரயம் கொடுத்த ஒவ்வொருவருக்கும் எவ்வாறு பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 6, 7 இலக்கமிட்ட ரத்தினம், ஜெயப்பிரகாஷிற்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது. 10.07.1975 செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி, 6, 7 இலக்கமிட்டவர்களுக்கு பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 6 இலக்கமிட்டவர்க்கு, 29.03.1976 செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி பாத்தியம் என குறிப்பிடப்பட்டிருந்தது. 1975 மற்றும் 1976 செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை, அது குறித்து வாரண்டில் எதுவும் குறிப்பிடவில்லை.

2. பிரதிவாதிகளின் மூல ஆவணங்களை கொண்டு அளந்தேனா என்றால் இல்லை. எனக்கு அளித்த வாரண்டில் பிரதிவாதிகளின் கிரய ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்களின் படி அளக்க தான் பணிக்கப்பட்டிருந்தது. 07.07.2005 கிரய ஆவணத்தில், கிரயம் கொடுத்தவர்கள் 9 நபர்களுக்கும், சொத்துக்கள் எவ்வளவு பாத்தியம் என்பதை தனித்தனியாக அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. 21.02.2006 தேதியிட்ட கிரய ஆவணத்தில், கிரயம் கொடுத்தவர்கள் 9 நபர்கள் ஆவார்கள். 21.02.2006 கிரய ஆவணத்தில், கிரயம் கொடுத்தவர்கள் 9 நபர்களுக்கும், சொத்துக்கள் எவ்வளவு பாத்தியம் என்பதை தனித்தனியாக அளந்து பார்த்தேனா என்றால் இல்லை.

3. வருவாய் ஆவணத்தில், க.ச.எண்.194/9 என்பது கூட்டு வண்டிப்பாதை என்றால் சரிதான். கூட்டு வண்டிப்பாதையில் உரிமையாளராக 1ம் வாதி தெய்வசிகாமணி பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் நினைவில்லை. சர்வேயர் பார்த்தார். எனக்கு தனியாக தரவில்லை. எனவே எனக்கு நினைவில்லை. பிரதிவாதி தான் வேலி அமைத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் பார்வையிடும்போது கம்பிவேலி இருந்தது. அந்த கம்பிவேலி மிகவும் பழைமையானது என்றால் அவ்வாறு எனக்கு தெரியவில்லை. க.ச.எண்.194/4 காலையில் உள்ள தென்னை மரங்கள் மற்றும் முருங்கை மரத்திற்கு எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் சுமார் 6 அடிக்கு மேல் இருக்கும்.

4. க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளின் தென்புறமும், மேல்புறமும் வேலி இல்லை என்றால் மேல்புறம் உயிர் வேலி இருந்தது, தென்புறமும் உயிர்வேலி இருந்தது. கம்பிவேலி எதுவும் இல்லை. க.ச.எண்194/1A, 1B, 1C காலைகளில் கல்லூரி இருந்ததா என்றால் இல்லை. க.ச.எண்.194/1 நம்பர் காலையில் கல்லூரிக்கு செல்லக்கூடிய தார் சாலை உள்ளதா என்றால் இல்லை, அதனை ஒட்டி வடபுறமாக தார் சாலை உள்ளது.மேற்படி தார் சாலை கொள்ளுப்பாளையத்தில் இருந்து தென்வடலாக வருகிறது என்றால் அது பற்றி தெரியாது. புல எண்.194 காலையின் ஒவ்வொரு உட்பிரிவையும் தனித்தனியாக அளக்கவில்லை என்றால் சரியல்ல. க.ச.எண்.194/5, 6, 7, 8 காலைகளின் வெளிப்புறமாக அளந்தேன். மற்ற காலைகளை தனித்தனியாக அளந்தேன்.

5. வாரண்டின் படி ஒவ்வொரு காலைகளிலும் தனித்தனியாக அளக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நான் தனித்தனியாக அளவீடு செய்யவில்லை என்றால் எனக்கு கொடுக்கப்பட்ட உத்தரவில், "Directed to measure the property of the defendants in terms of the registered sale deed in favour of the defendants and the revenue records in their names" என குறிப்பிடப்பட்டிருந்தது. க.ச.எண்.194/9 காலை ஆவணங்களின் படி முழுமையாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு சொல்ல எனக்கு அதிகார வரம்பு இல்லை என்றால் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை, ஆவணங்களின் படி இருந்ததாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

6. பிரதிவாதிகள், வாதியின் சொத்தை ஆக்கிரமிக்கவில்லை என்று நான் சொல்ல முடியாது என்றும், வருவாய்துறை பதிவுகளின் படியும், பிரதிவாதிகள் கொடுத்த 2 கிரய ஆவணங்களின் படியும், ஆக்கிரமிப்பு இருப்பதாக எனக்கு தெரியவில்லை என்று தான் நான் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றும், நான் அறுதியிட்டு ஆக்கிரமிப்பு இல்லை என்று சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை என்றால் ஆக்கிரமிப்பு உள்ளதாக எனது அறிக்கையில் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் வாதிகளின் பூமியை, பிரதிவாதி ஆக்கிரமிக்கவில்லை என சொல்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் முதல் விசாரணையின் போது கேட்ட கேள்விக்கு அறிக்கையின் படி பதில் சொல்லியுள்ளேன்.

7. க.ச.எண்.194/8 காலைக்கு கிழபுறமாக, 6 செண்ட் விஸ்தீரணம் உள்ள பூமி யாருடைய பூமிக்குள் சேர்ந்துள்ளதாக தெரியவருகிறது என்றால் வாதிகளின் பூமியுடன் சேர்ந்துள்ளதாக தெரியவருகிறது. அந்த பூமி க.ச.எண்.194/9 பூமிக்கு மேல்புறமாகவும், க.ச.எண்.194/8 க்கு கிழபுறமாகவும் உள்ளதாக தெரியவருகிது என்றால் சரிதான். நான் சரிவர அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் ஆவணத்தின்படி முழுமையாக அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியமும், அறிக்கையும், என்னுடைய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur